


# 1

# என்னைப் புரிந்துக் கொள்ளுதல்

## அறிவது, விரும்புவது, கற்றது

| நான் அறிவது | நான் அறிந்துக் கொள்ள விரும்புவது | நான் கற்றது |
|---|---|---|
| | | |

இந்தப் பிரிவைத் தொடங்கும் முன், நான் அறிவது, அறிந்துக் கொள்ள விரும்புவது மற்றும் நான் கற்றது ஆகிய கட்டங்களை தன்னிச்சையாகவோ அல்லது நெறியாளரின் உதவியுடனோ பூர்த்தி செய்யவும்.

## 1. தொடங்கவும்

### கற்றல் நோக்கம்

- இந்தப் பாடத்தைப் படித்த பின் உங்கள் நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பற்றி அறிந்துக் கொள்வதற்கான செயல்பாடுகளை நன்கு தெரிந்துக் கொள்வீர்கள்

### அறிமுகம்

வேலை வாய்ப்புத் திறன்களைப் பற்றி புரிந்து கொள்வதற்குமுன், நாம் முதலில் புரிந்துக் கொள்ள வேண்டியது,

- நான் யார்?
- என்னுடைய பண்புகள் யாவை?
- நான் எப்படி நடந்துக் கொள்கிறேன்?
- என் பலம் என்ன?
- இந்தப் பாடத்தை கற்பிப்பவர்கள் யார்?
- என் அருகில் அமர்ந்திருப்பவரைப் பற்றி எனக்குத்தெரியுமா?

மேற்கண்ட கேள்விகளுக்கு விடையைக் காண்போம்.



XI_TM_EMPS_CHAP01_2022.indd 1 30-06-2022 12:11:08

## செயல் 1

### பெயர் விளையாட்டு

1. ஒரு வட்ட வடிவத்தில் நிற்கவும்.
2. உங்களை அறிமுகப்படுத்துவதற்கு, உங்கள் பெயரின் தொடக்க எழுத்தில் தொடங்கும்,நேர்மறைப்பெயரடையைப் பயன்படுத்தவும்,
3. முதல் நபர் அவரது பெயர் மற்றும் அதே முதல் எழுத்தில் தொடங்கும் பெயரடையுடன் தொடங்குகிறார்.
4. இரண்டாவது நபரும் அப்படியே தொடர்கிறார்




## செயல் 2

### பகிர்வும் பொறுப்பும்

**1**

2 நிமிடங்கள்: ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு நாணயத்தை எடுத்துக் கொள்ளவும், அனைவரும் நாணயத்தை எடுத்தபின் இரண்டாவது படிக்கு செல்லவும்.

**2**

2 நிமிடங்கள்: உங்கள் குழுவை உருவாக்கவும். இரண்டு நிமிடத்தில் ஒத்த வெளியீட்டு ஆண்டு அல்லது ஒத்த மதிப்புடைய நாணயங்களை வைத்திருக்கும் 3 நபர்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கவும்.

**3**

20 நிமிடங்கள்: ஒரு குழுவாக சேர்ந்து தகவல் பரிமாறிக் கொள்ளவும். அதாவது, உங்களுடைய சொந்த ஊர் எது? உங்களுடைய பள்ளிப்பருவ விருப்பமான நினைவுகள் எவை? உங்களுடைய பொழுதுபோக்கு என்ன? உங்களுக்குப் பிடித்த பாடங்கள்? ஆகிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும்.

**4**

5 நிமிடங்கள்: உங்களிடையே உள்ள ஒற்றுமைகளைப் பட்டியலிடவும்.

**5**

5 நிமிடங்கள்: குழு உறுப்பினர்களிடையயே உள்ள வேற்றுமைகளைப் புகழுங்கள். ஒவ்வொரு குழுவிலும் உள்ள வேற்றுமைகளைப் பட்டியலிடவும்.

**6**

20 நிமிடங்கள்: உங்கள் வகுப்பில் உள்ள அனைவரிடமும் விவரங்களைப் பகிரவும். உங்கள் குழுவில் ஒற்றுமைகள், காரணிகள் மற்றும் ஒவ்வொரு குழுவையும் மற்றக் குழுவிடமிருந்து வேறுப்படுத்திக் காட்டும் தனித்தன்மை விவரங்களைப் பகிரவும்



XI_TM_EMPS_CHAP01_2022.indd 2 30-06-2022 12:11:08

## செயல் 3

உங்கள் தாய் மொழியை எப்படிக் கற்றுக் கொண்டீர்கள் என்பது நினைவிருக்கிறதா?

ஒரு மாணவரைத் தேர்ந்தெடுத்து, உங்கள் தாய்மொழிக் கற்றல் அனுபவங்களைப் பற்றி அவரிடம் சொல்லுங்கள். கொடுக்கப்பட்ட இடத்தில் நீங்கள் குறிப்புகள் எழுதலாம். பெட்டியில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- பெற்றோர் மற்றும் பெரியவர்கள் எப்படி பேசினார்கள் என்பதை கவனித்தல், மற்றும் கதைகளை கேட்டல்.
- குழந்தைப் பருவ நண்பர்களுடன் விளையாடும் போதும் கற்றுக் கொண்டோம். குழந்தைப் பருவத்தில் நாங்கள் வசித்த பகுதியில் பேசப்பட்டதின் மூலம் கற்றுக்கொள்ளுதல்.
- பெரியவர்கள் பேசுவதைக் கேட்டும், தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்களை பார்த்தும் அதே போல் செய்வது

## செயல் 4

'எனது மகிழ்ச்சியான நினைவுகள்' என்ற தலைப்பில் 2 நிமிட உரையைத் தயாரித்து, அதை உங்கள் வகுப்பின் முன் சமர்ப்பிக்கவும்.



உங்களை நன்குப் புரிந்துகொள்ள, பின்வருவனவற்றையும் செய்யலாம்:

1. ஆளுமைத் தேர்வை மேற்கொள்ளுங்கள்:
   உங்களைப் பற்றிய சிறந்த புரிதலைப் பெற நீங்கள் செய்யக் கூடிய முதல் விஷயம், பாரபட்சமற்ற ஒரு புறநிலை மதிப்பீட்டைச் செய்வதாகும். இதை பிறரின் உதவியுடனும் செய்யலாம்.
2. உங்கள் கற்றல் முறையைப் புரிந்துக் கொள்ளுங்கள்:
   ஒவ்வொரு நபரும் தங்கள் உலக அனுபவத்தை வெவ்வேறு வழிகளில் கற்றுக்கொண்டு செயலாற்றுகிறார்கள். நீங்கள் எந்தக் கற்றல் வழியைக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிவது, நீங்கள் பள்ளியை விட்டு வெளியேறிய பிறகும் அது உங்களுக்கு உதவும். மேலும் சில செயல்பாடுகளில் நீங்கள் ஏன் தடுமாறுகிறீர்கள், மற்றவற்றில் சிறந்து விளங்குகிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ள உதவுகிறது. இதற்காகப் பல இலவச நிகழ்நிலை (ஆன்லைன்) பயிற்சிகள் உள்ளன. இது ஒரு சர்ச்சைக்குரிய அறிவியல் என்பதை அறிந்து கொள்ளுங்கள். கற்றல் வழிகள் எத்தனை என்பதைப் அறிய பல கோட்பாடுகள் உள்ளன. மேலும் நீங்கள் எந்தச் பயிற்சியை மேற்கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்து வெவ்வேறு முடிவுகளைப் பெறலாம்.
3. பாத்திர எழுத்துப் பயிற்சிகளைச் செய்யுங்கள்.
   எ.கா. எழுத்தாளர்கள் புத்தகம் எழுதும் போது, அடிக்கடி எழுத்துப் பயிற்சியை மேற்கொள்வது.

## செயல் 5

இறுதியாக, வேலை வாய்ப்புத்திறன் ஆசிரியரைப் பற்றித் தெரிந்து உங்கள் பயிற்றுவிப்பாளரிடம் பின்வரும் கேள்விகளுக்கான பதில்களை உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள நீங்கள் உருவாக்கிய புதிய கேள்விகளையும் சேர்க்கலாம். சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.





XI_TM_EMPS_CHAP01_2022.indd 3 30-06-2022 12:11:08

அ) உங்கள் பெயர் என்ன?

ஆ) ஆசிரியராகும் ஆர்வம் உங்களுக்கு எப்படி வந்தது?

இ) ஒரு சிறந்த ஆசிரியரைப் பற்றிய உங்கள் பார்வை என்ன?

ஈ) உங்களின் தனிப்பட்ட பலம் என்ன?

## முடிவுரை

இந்தப் பாடத்திலிருந்து, உங்கள் பெயரடைகள், நீங்கள் எதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள், மேலும் உங்களைப் போலவே ஆர்வமும் விருப்பமும் கொண்ட புதிய நண்பர்களையும் கண்டுபிடித்துள்ளீர்கள், உங்கள் ஆசிரியருடன் இந்தப்பாடத்திட்டப்பயணத்தை ஆண்டு முழுவதும் தொடரப்போகிறீர்கள்.

# 2. வேலை வாய்ப்புத் திறன் பாடத்திட்டத்தின் அறிமுகம்

## கற்றல் நோக்கங்கள்

இந்தப் பாடத்தைப் படித்த பின்

- வேலை வாய்ப்புதிறன்கள் ஏன் தேவைப்படுகின்றன என்பதைக் கண்டறிய முடியும்
- வேலை வாய்ப்பில் உள்ள பல்வேறு திறன்களைப் பட்டியலிட முடியும்

## அறிமுகம்

**வேலை வாய்ப்புத் திறன்கள்:** வேலை + திறன். வேலைக்கு அமர்த்தப்படுவதற்கான வாய்ப்பு வேலைவாய்ப்பு எனப்படும்! எந்தவொரு வேலையிலும் பயிற்சிப் பெறுபவர் வெற்றிபெற உதவும் அனைத்துத் திறன்களும் இதில் அடங்கும்.

மற்றவர்களுடன் இணைந்து நன்றாகப் பணியாற்றவும், சிக்கல்களைத் தீர்க்க அறிவைப் பயன்படுத்தவும் அனுமதிக்கும் மென்மையான அகத் திறன்கள் இதில்அடங்கும். இந்ததிறன்கள் தொழில்நுட்பம் அல்லாத திறன்களாகும்.




**என்னைப் புரிந்துக்கொள்வது:** இந்த தொகுதி உங்களை ஒரு பயணத்தில் அழைத்துச் செல்லும். அது உங்களைப் புரிந்து கொண்டு, உங்களின் ஆர்வங்கள், திறன்கள் மற்றும் முன்மாதிரிகளை ஆராயும் பயணம், இந்தத் திறன்களைக் கற்றுக்கொள்வது உங்கள் வாழ்நாள் முழுவதும் பயனுள்ளதாக இருக்கும். இந்த முக்கிய புரிதல்கள் நமது முடிவுகள், மற்றும் மற்றவர்களுடனான தொடர்புகளில் செல்வாக்கு செலுத்துவதில் முக்கியப் பங்குவகிக்கின்றன.

**ஆங்கிலத்திறன்கள்:** உங்களால் எளிய, அடிப்படையான ஆங்கிலம் பேச, படிக்க மற்றும் எழுத தெரிந்தால், உலகம் முழுவதும் உள்ள வேலைகளுக்கு நீங்கள் தகுதி பெறுவீர்கள்! மேலும், தினமும் ஒரு மணி நேரம் பயிற்சிசெய்தால் போதும். கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய நான்கு மொழித்திறன்கள் முழுமையான தொடர்புக்கு நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

**தொடர்புதிறன்:** பயிற்றுவிப்பாளர் உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டால், நீங்கள் எப்போதும் உங்கள் கையை உயர்த்தி தயங்காமல் பதிலளிக்க முடியுமா? ஒரு புதியவருக்கு உங்களை அறிமுகப்படுத்துவது எளிதாக இருக்கிறதா? தகவல் தொடர்பு திறனை நீங்கள் கற்றுக்கொண்டால், 'தயக்கம்' பற்றி நீங்கள் மீண்டும்



XI_TM_EMPS_CHAP01_2022.indd 4 30-06-2022 12:11:08

கவலைப்பட வேண்டியதில்லை. உங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் யாரிடமும் வெளிப்படுத்த முடியும்!

**கணினி திறன்கள்:** எதிர்காலத்தில் உங்கள் விண்ணப்பத்தை /தகுதித் தொகுப்பை உருவாக்க வேண்டுமா? சமீபத்திய தொழில் நுட்பங்களைப் பற்றிய அறிவை வரம்பற்ற அணுகலைப் பெறவிரும்புகிறீர்களா? தகவல் தொழில்நுட்பகல்வியறிவைக்கற்றுக்கொள்வது இவை அனைத்தையும் மேலும் பலவற்றையும் கற்றுக் கொடுக்கிறது. கணினித் திறன்கள் பிரிவில் தேர்ச்சிப் பெற்ற மாணவர், சிறந்த விண்ணப்பத்தை உருவாக்கலாம், சிறந்த வேலைகளைக் கண்டறியலாம் மற்றும் புதிய திறன்களை விரைவாகக் கற்றுக்கொள்ளலாம்.

**தொழில் முனைவு:** உங்கள் சொந்த நிறுவனத்தைத் தொடங்குவது பற்றி யோசித்தீர்களா? பல்வேறு தொழில்களில் தொழில்நுட்பப் பயிற்சிபெற்று, தொழில்முனைவோரை தொழில்வாய்ப்பாகப் பெறவிரும்பும்ஆர்வமுள்ளஇளைஞர்களுக்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. பாடங்கள் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் பற்றியதகவல் / உந்துதல் மற்றும் அவர்களால் எழுதப்பட்ட திட்ட அறிக்கையைப் பெறுவதில் கவனம் செலுத்துகின்றன.

**21ஆம் நூற்றாண்டின் திறன்களை உருவாக்குதல்:** 21 ஆம்நூற்றாண்டில், புதிய திறன்களைக் கற்றுக் கொள்வதற்கான நம்பிக்கையும் திறனும் உள்ளவர்களுக்கே வெற்றி! இன்று நீங்கள் கற்றுக்கொள்ளும் அறிவும் திறமையும் அடுத்த சில ஆண்டுகளில் காலாவதியாகிவிடும். ஆனால், நீங்கள் சொந்தமாக புதிய திறன்களைக் கற்றுக்கொண்டால், அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

**நிதி பற்றிய அறிவு:** நாம் வாழும் உலகம் டிஜிட்டல் மயமாகி வருகிறது. இதில் நீங்கள் பணத்தின் தேவை, வங்கிக் கணக்கைத் திறப்பது மற்றும் ஒட்டு மொத்த வங்கிச் சேவையைப்புரிந்துக்கொள்வதுஆகியவற்றைக் கற்றுக் கொள்வீர்கள். மேலும், பணப் பரிமாற்ற உலகிற்கு நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம்.

**வேலை உலகத்திற்கான தயாரிப்பு:** வேலை உலகம் என்பது பணியிடச் சூழலைக் குறிக்கும். உங்கள் பணியிடத்தில் தேவைப்படும் திறன்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா? வேலை செய்யும் சூழலைப் பற்றி நாம் கற்றுக் கொள்ள வேண்டும், இதன் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பல்வேறு திறன்கள் மற்றும் தொழில் நுட்பங்களைப் பற்றி புதுப்பித்த நிலையில் இருக்க முடியும். கிடைக்கக்கூடிய பல்வேறு வாய்ப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் இது உதவுகிறது.

## செயல் 1

கடந்த மூன்று ஆண்டுகளில் நீங்கள் கற்றுக் கொண்ட சில புதிய விஷயங்களை நினைவுப்படுத்த முயற்சிக்கவும். கீழே கொடுக்கப்பட்டுள்ள விஷயங்களின் பட்டியலை நீங்கள் பயன்படுத்தலாம். கடந்த மூன்று ஆண்டுகளில் நீங்கள் கற்றுக் கொண்டவற்றைக் குறியிட்டுக் காட்டவும்.

| | | |
|---|---|---|
| மிதிவண்டி ஓட்டுவதற்கு | இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு | மகிழுந்து ஓட்டுவதற்கு |
| | | |
| எங்கள் ஊரிலிருந்து தனியாக நகரத்திற்கு பேருந்தில் செல்ல | ஸ்மார்ட் போன் பயன்படுத்த | வாட்ஸ் அப்பில் உரையாட |
| | | |
| ஃபேஸ்புக் கணக்கை உருவாக்கியது | யூடியூபில் ஸ்மார்ட் போன் மூலமாக வீடியோ பார்க்க | கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து செயலிகளை பதிவிறக்கம் செய்ய |
| | | |
| ஆன்லைனில் கிரிக்கெட் போட்டிகளை பார்க்க | மீம்ஸ்களை உருவாக்க | ஆன்லைனில் இரயில்வே டிக்கெட்டுகளை பதிவு செய்ய |
| | | |



XI_TM_EMPS_CHAP01_2022.indd 5 30-06-2022 12:11:08

## செயல் 2

மற்றுமொரு முக்கிய கேள்வி! இந்தத் திறன்களையெல்லாம் நாம் எப்படிக் கற்றுக் கொள்ளப் போகிறோம்? நாங்கள் உங்களுக்கு ஒரு குறிப்பை வழங்க முடியும். நல்ல உதவிக் குறிப்புகளைப் படிப்பதன் மூலமோ அல்லது கேட்பதன் மூலமோ நீங்கள் அவற்றைக் கற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் எப்படி மிதிவண்டி ஓட்டக் கற்றுக் கொண்டீர்களோ அவ்வாறாகக் கற்றுக்கொள்ளலாம்!

| திறன்கள் | இதைக் கற்க நீங்கள் என்ன செய்ய வேண்டும் | உங்கள் வேலைவாய்ப்பு நெறியாளர் எப்படி உதவ முடியும்? | உங்கள் நண்பர்கள் எப்படி உதவ முடியும்? |
|---|---|---|---|
| தொழில்முறை அணுகுமுறை | | | |
| ஆங்கிலம் பேசுதல்,படித்தல், எழுதுதல் | | | |
| சரியாக தகவல் பரிமாறுதல் | | | |
| தொழில்நுட்பத்தைக் கற்றல் | | | |

## முடிவுரை

வேலை வாய்ப்புத் திறன்கள் என்பது ஒரு தனி நபரால் வேலைவாய்ப்பிற்கு ஏற்றதாக ஆவதற்கு கற்கும் திறன்கள் ஆகும் . இப்போது நீங்கள் வேலை வாய்ப்புதிறன்களில் சேர்க்கப்பட்டுள்ள திறன்களைப் பற்றிய அறிமுகத்தைப் பெற்றுள்ளீர்கள். மேலும், பின்வரும் பாடங்களில் நீங்கள் என்ன கற்றுக் கொள்ளப் போகிறீர்கள் என்பதைப் பற்றிய ஒரு சிறிய பகுப்பாய்வு செய்து, நீங்கள் மேம்படுத்த வேண்டிய திறன்கள் என்ன என்பதை ஆராயுங்கள்.

### மாணவர்களுக்கான கேள்விகள்

1. உங்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்த, கல்வி பயிலும் போது நீங்கள் என்ன செய்வீர்கள்?

_______________

_______________

_______________

2. இந்தப் படிப்பை முடித்த பிறகு, உங்கள் வேலையில் சிறந்து விளங்க நீங்கள் தொடர்ந்து எந்த வகையான நடவடிக்கைகளை எடுப்பீர்கள்?

_______________

_______________

_______________



XI_TM_EMPS_CHAP01_2022.indd 6 30-06-2022 12:11:08

## 3. தனிப்பட்ட மற்றும் மற்றவர்களுடனான உறவுநிலைத் திறன்கள்

### கற்றல் நோக்கங்கள்

இந்த பாடத்தைப் படித்த பின், உங்களால் முடியும்:

- தனிப்பட்ட மற்றும் மற்றவர்களுடனான உறவுநிலைத்திறன்களைப்புரிந்துகொள்ள.
- தனிப்பட்ட மற்றும் மற்றவர்களுடனான உறவுநிலைத் திறன்களை வேறுபடுத்த.
- தனிப்பட்ட மற்றும் மற்றவர்களுடனான உறவுநிலைத் திறன்களை அடையாளம் காண.

### அறிமுகம்

ஒரு பணியாளரின் இன்றியமையாத தகுதிகளில் ஒன்று தனிப்பட்ட மற்றும் மற்றவர்களுடனான உறவுநிலைத் திறன்கள்ஆகும். உங்களைப் பற்றிய சிறந்த புரிதல் மற்றும் மற்றவர்களுடன் நீங்கள் எவ்வாறு தொடர்பு கொள்கிறீர்கள் என்பது ஒரு குழுவில் நீங்கள் எந்தளவுக்கு பலனளிக்க முடியும் என்பதை தீர்மானிக்கிறது. இந்தத் திறன்களைக்கண்டறிவது, நீங்கள் விரும்பும் ஒரு வேலையைப் பெறுவதற்கும், தனிப்பட்ட மற்றும் சமூக உறவுகளை நீண்டகாலத்திற்குப் பேணுவதற்கும் உதவும்.




### தனித் திறமைகள்

தனிப்பட்ட திறன்கள் ஒரு மனிதனிடம் இருக்கும் திறன்கள் என வரையறுக்கலாம். இவை திறன்கள் மற்றும் பண்புகளின் வடிவத்தில்இருக்கலாம். எடுத்துக்காட்டாக, இந்திய தகவல் தொழில்நுட்ப சேவை HCL இன் முதன்மை செயல் அதிகாரி வினீத் நாயர் ஒரு சிறந்த தொலைநோக்கு தலைவர்ஆவார், அவர் சிறந்த தலைமைத்துவ திறன்களைக் கொண்டிருந்தார், அவர் தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகத்தை "பணியாளருக்குப்பின் தான் வாடிக்கையாளர்" என்று மாற்றினார்; இது அவரது தனிப்பட்ட திறமை. தனிப்பட்ட மற்றும் தொழில்முறை சூழ்நிலைகளில் நாங்கள் நிபுணத்துவம் வாய்ந்த திறன்களை அறிவது முக்கியம்.

தனிப்பட்ட திறன்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

- மென் திறன்கள்
- கடினத் திறன்கள்

மென்மையான திறன்கள் நமது ஆளுமையின் அறிதான பண்புகளாகும். மென்மையான திறன்கள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதில் நமக்கு உதவுகின்றன மற்றும் நமது அணுகுமுறை, உணர்ச்சிகள், பழக்க வழக்கங்கள், தொடர்புநடை, சமூக நடத்தை மற்றும் ஆளுமை ஆகியவற்றுடன் தொடர்புடையவை. வேலை வாய்ப்புதிறன்கள் முக்கியமாக ஒரு தனிநபருக்கு தேவையான அனைத்து மென்மையான திறன்களையும் உள்ளடக்கியது.






XI_TM_EMPS_CHAP01_2022.indd 7 30-06-2022 12:11:09

கடின திறன்கள் என்பது ஒரு பணியை (தொழில்நுட்பம்) செய்வது தொடர்பான குறிப்பிட்ட பண்புகளாகும். இந்த திறன்கள் பொதுவாக சில பகுதிகளுடன் தொடர்புடைய திறன்கள் மற்றும் அறிவு. இது பெரும்பாலும் கல்வி மற்றும் அனுபவத்தின் மூலம் தனிநபரால் கற்றுக்கொள்ளப்படுகின்றன. கடின திறன்களின் எடுத்துக்காட்டுகள் மொழிபுலமை, பாடத்திறன் (கணக்குகள், தணிக்கை, மேலாண்மை, மருத்துவம், முதலியன), ஓட்டுநர் திறன் போன்றவை. இத்தகைய திறன்கள் வேலை வாய்ப்பைத் தீர்மானிக்கிறது மற்றும் முதலாளிக்கு பொறுப்புகள் மற்றும் பணிகளை ஒதுக்க உதவுகிறது. மென்மையான மற்றும் கடினமான திறன்கள் இரண்டும் அவசியம். அவை ஒன்றாக வேலை செய்கின்றன மற்றும் ஒருவரையொருவர் பூர்த்தி செய்யமுடியும், ஒரு தனிநபருக்கு தனித்துவமான ஆளுமையை வளர்க்க உதவுகிறது.

## மற்றவர்களுடனான தொடர்புத் திறன்கள்

தனித்தனியாகவும் குழுக்களாகவும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும்போதும், தொடர்பு கொள்வதன் மூலமும் நாம் அன்றாடம் பயன்படுத்தும் திறன்கள்தான் மற்றவர்களுடனான உறவுத் திறன்கள். அவை




பரந்த அளவிலான திறன்களை உள்ளடக்கியது, ஆனால் குறிப்பாக கேட்பது மற்றும் திறம்பட பேசுவது போன்ற தொடர்பு திறன்கள்.

### தொடர்பு திறன்களில் பின்வருபவை அடங்கும்

- தொடர்பு திறன்
- வாய்மொழி தொடர்பு
  - வாய்மொழி அல்லாத தொடர்பு
  - கேட்கும் திறன்
- மன எழுச்சி திறன்
- குழு வேலை
- பேச்சுவார்த்தை, வற்புறுத்தல் மற்றும் செல்வாக்கு செலுத்தும் திறன்
- முரண்பாடுகளுக்கு தீர்வு மற்றும் நடுநிலைத்தன்மை
- சிக்கல்களைத் தீர்ப்பது மற்றும் முடிவெடுத்தல் திறன்

### தனிப்பட்ட மற்றும் மற்றவர்களுடனான தொடர்புத் திறன்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள்

| தனிப்பட்டதிறன் | மற்றவர்களுடனான தொடர்புத் திறன் |
|---|---|
| நெறிமுறையாக சிந்திக்கவும் நடந்து கொள்ளவும் | குழு இயக்கவியலைப் புரிந்துகொள்ள |
| மனஅழுத்தம், முரண்பாடு மற்றும் சவால் போன்ற சூழ்நிலைகளில் தன்னைக் கையாள்வது | அறிவை மாற்றவும் பெறவும் |
| புதிய சூழ்நிலைகளில் நெகிழ்வாக இருக்க | மக்களுடன் கலந்துரையாட |

## செயல் 1

கடையில் உள்ள பல்வேறு பொருட்களைப் பார்த்தப் பின்பு நீங்கள் விரும்பிய ஸ்மார்ட்ஃபோனைக் வாங்கி வந்தீர்கள், பணம் செலுத்திய பிறகு, அட்டைப் பெட்டியை திறந்த போது பொருளின் உள்ளே சில சேதங்களை நீங்கள் கவனித்தீர்கள், இப்போது நீங்கள் பொருளைத் திருப்பி அளித்து உங்கள் பணத்தை திரும்பப் பெற விரும்புகிறீர்கள். இந்தச் சூழ்நிலையைப் பற்றி விவாதிக்கவும், சூழ்நிலைக்கு நீங்கள் எப்படி உணர்ச்சிபூர்வமாக பதிலளிப்பீர்கள். நீங்கள்



XI_TM_EMPS_CHAP01_2022.indd 8 30-06-2022 12:11:10

எவ்வாறு பதிலளிக்கலாம் என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
|  | வணக்கம் ஐயா, நான்வாங்கியபொருள் பழுதடைந்துள்ளது. என்னிடம் ரசீது உள்ளது. நீங்கள்எனக்கு மாற்றித் தர முடியுமா அல்லது பணத்தைத் திருப்பித் தர முடியுமா? |
|  | நான் பணத்தைச் செலவழித்து வாங்கிய பொருள் வீணானது. எப்படித் தேர்வு செய்வது என்று தெரியவில்லை. |
|  | பழுதடைந்த பொருளை எனக்கு எப்படி விற்கலாம்? மேலாளர் எங்கே? நான் அவரிடம் பேச வேண்டும். நான் உங்கள் அனைவர் மீதும் வழக்கு தொடர போகிறேன்.... |
|  | நான் 2 மணி நேரத்திற்கு முன்பு இந்தப் பொருள் வாங்கினேன். இப்போது தான் அதில் குறைபாடுள்ளதை கவனித்தேன். நான் இந்தப் பொருளை மாற்ற ஏதேனும் வாய்ப்பு உள்ளதா? இல்லைஎன்றால், நான் ஒரு புதிய பொருளை வாங்குவேன். உங்கள் நேரத்தை வீணடித்ததற்கு மன்னிக்கவும். |

## முடிவுரை

தனிப்பட்ட மற்றும் மற்றவர்களுடனான தொடர்பு திறன்களை அடையாளம் காணவும், வேறுபடுத்தவும், அவை எப்போது, எங்கு பயன்படுத்தப்படலாம், உங்கள் பணி வாழ்க்கைக்கு அவை எவ்வாறு முக்கியம் மற்றும் அவற்றை எவ்வாறு மேம்படுத்துவது என்பதை நீங்கள் இப்போது கற்றுக்கொண்டீர்கள். பயனுள்ள தனிப்பட்ட மற்றும் மற்றவர்களுடனான தொடர்பு திறன்களைக் கொண்டிருப்பது எல்லா இடங்களிலும் ஆரோக்கியமான உறவுகளைப் பராமரிக்க உதவும்.

### மாணவர்களுக்கான கேள்விகள்

1. கீழே உள்ள செயல்பாட்டின் அடிப்படையில், உங்களிடம் இருக்க வேண்டிய பின்வரும் திறமையை பகுப்பாய்வு செய்யுங்கள்

அ. தனிப்பட்ட திறன்கள் ______________________

ஆ. மற்றவர்களுடனான தொடர்பு திறன்கள் ______________________

## 4. தன்னையறிதல் மற்றும் மற்றவர்களை அறிந்து கொள்ளுதல்

### கற்றல் நோக்கங்கள்

இந்த பாடத்தைப் படித்த பின்பு, உங்களால் முடியும்:

- திறன்கள் அல்லது திறமைகள் போன்ற தனிப்பட்ட பலம் மக்களிடம் இருப்பதை அங்கீகரிக்க
- சுய மற்றும் மற்றவர் பலம், திறமைகள் மற்றும் திறன்களைகளை அடையாளம் காண
- மக்களின் குணங்கள் மற்றும் திறமைகளை விவரிக்க ஆங்கில வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளுதல்.

### அறிமுகம்

உங்கள் எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டமிடும் போது,உங்கள் சொந்த பலம், குணங்கள், எண்ணங்கள், மதிப்புகள், யோசனைகள் மற்றும் ஆளுமை ஆகியவைப் பற்றி அறிந்திருந்தால் உதவியாக இருக்கும்.

நீங்கள் எதில் சிறந்தவர் என்பதை அறிந்தால், சரியான தொழில் வாய்ப்புகளை நீங்கள் அடையாளம் காணலாம். மேலும், உங்கள் முன்னேற்றத்தின் பகுதிகளை நீங்கள் புரிந்துகொள்ளும்போது, நீங்கள் எப்பொழுதும் கற்று உங்களை மேம்படுத்திக் கொண்டே இருப்பீர்கள்!

### உங்களைப் பற்றி அறிக:

பின்வருவனவற்றைப் பற்றி சிந்தியுங்கள்

- நாங்கள் எவற்றில் சிறப்பாக செயல்படுகிறோம்
- மற்றவர்கள் நமது நற்குணங்களை அங்கீகரிக்கிறார்கள்
- மக்கள் அடிக்கடி எங்களிடம் உதவி கேட்கிறார்கள்



XI_TM_EMPS_CHAP01_2022.indd 9 30-06-2022 12:11:10

- நீங்கள் செய்யவிரும்புவது
- உங்களை மகிழ்ச்சியடையச் செய்யும் செயல்
- உங்கள் ஓய்வு நேரத்தில் நீங்கள் இதைச் செய்கிறீர்கள்




சில பிரபலமான ஆளுமைகளும் அவர்களின் பலமும்


ஏ.பி.ஜே.அப்துல் கலாம்: அறிவுக்கூர்மை, எளிமை, சிறந்த அறிவியல் விஞ்ஞானி


அன்னைத் தெரசா : கருணை, இரக்கம், உதவிப்புரிதல்


ஏ. ஆர். ரஹ்மான்: இசை கலைஞர், கடின உழைப்பாளி, தாராள குணம்


எம்.எஸ்.தோனி: சாந்தம், பொறுமை, சிறந்த விளையாட்டு வீரர்


மலாலா யூசுப்சாய்: தைரியமானவர், நல்ல பேச்சாளர்

## செயல் 1

உங்கள் பலத்தை அடையாளம் கண்டு, உங்கள் நண்பரையும் அறிந்துக் கொள்ளுங்கள்.

உங்களிடமுள்ள நற்குணங்கள், திறமைகள் அல்லது திறன்கள் குறியிடவும் அல்லது வட்டமிடவும்

| நற்குணங்கள் | திறமைகள் | திறன்கள் |
|---|---|---|
| நேர்மை | நல்லப் பாடகர் | நன்றாக சமைத்தல் |
| கடின உழைப்பாளி | கவிஞர் | விளையாடுதல் ____________ |
| ஆர்வமுள்ளவர் | இசைக்கலைஞர், ______ வாசிப்பேன் | கணினிப் பயன்படுத்துதல் |
| நட்பானவர் | நடிகன் | கணக்குகளை வேகமாக செய்வேன் |
| உதவி செய்தல் | ஓவியன் | ஓட்டுதல் (கார், ஜீப், டிராக்டர்) |
| உணர்திறன் | நல்ல நடனக்கலைஞன் | _________ இயந்திரம் இயக்குதல் |
| அமைப்பாளர் | நல்ல பல குரல் திறமை | ஆங்கிலம் பேசுதல் |

இன்று உங்களில் ஏதேனும் புதிய பலத்தை கண்டு பிடித்தீர்களா? அவை என்ன?

---

---

நாம் எப்போதும் புதிய பலங்களை பெற முடியும். நாம் இதுவரை முயற்சி செய்யாத பல விஷயங்கள் உள்ளன. நமது வாழ்க்கை அனுபவம் வளரவளர நமது பலமும் கூடுகிறது.

உங்கள் பலத்தை அடையாளம் கண்டுகொண்ட பிறகு, நீங்கள் இப்போது அதைப் பயன்படுத்த முடியும் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியைக் காட்ட முடியும், ஆனால் நீங்கள் ஒரு குழுவில் பணியாற்றப் போகிறீர்கள் என்றால், உங்கள் வேலையை மிகவும் பயனுள்ளதாக மாற்ற மற்றவர்களின் பலத்தைப் பற்றி அறிந்துகொள்வது அவசியம். மற்றவர்களின் பலத்தை கண்டறிந்து அதற்கேற்ப வேலைகளை ஒதுக்குவது உங்களுக்கும் உங்கள் பணிக்கும் அதிக பலனைத் தரும்.

## செயல் 2

குறைந்தப் பட்சம் 3 குடும்ப உறுப்பினர்கள் மற்றும் 3 நண்பர்கள்/வகுப்புத் தோழர்களின் பலம்களைப் பட்டியலிடவும்.

| வ.எண் | பெயர் | உறவுமுறை | பலம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |



XI_TM_EMPS_CHAP01_2022.indd 11 30-06-2022 12:11:11

## முடிவுரை

இந்த பாடத்தில் சிறப்பு குணங்கள், பலம் மற்றும் திறன்கள் பற்றி கற்றுக் கொண்டோம். உங்கள் பலத்தையும் மற்றவர் பலத்தையும் அடையாளம் கண்டு கொண்டீர்கள். ஒரு குழுவாக பணிபுரியும் போது சுய மற்றும் பிறரின் வலிமை மற்றும் திறன்களை அடையாளம் காண வேண்டியதன் அவசியத்தைப் பற்றி நீங்கள் கற்றுக் கொண்டீர்கள்.

### மாணவர்களுக்கான கேள்விகள்

1. ஒருவரின் பலத்தை விவரிக்க நாம் பயன்படுத்தக்கூடிய சில பொதுவான சொற்கள் யாவை?

______________________________

______________________________

______________________________

______________________________

2. ஒருவரின் பலத்தை அறிவது ஏன் முக்கியம்?

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

3. உங்கள் பலம் பற்றிய அறிவை உங்கள் தொழில் முடிவுகளில் எவ்வாறு பயன்படுத்தலாம்?

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## 5. வேலையின் எதிர்காலத்தை ஆராய்தல்

### நோக்கங்கள்

இந்த பாடத்தின் முடிவில், உங்களால் முடியும்:

- வேலையின் எதிர்காலம் பற்றி புரிந்துக்கொள்ள
- வேலையின் எதிர்காலம் ஏன் முக்கியமானது என்று அடையாளம் கண்டுக்கொள்ள
- வேலைத்திறன்களை புதுப்பித்த நிலையில் வைத்திருப்பதற்கான வழிகளை பகுப்பாய்வு செய்ய

### அறிமுகம்

வேலையின் எதிர்காலம் தொழில்நுட்பத்தின் விரைவான மாற்றத்தால் பாதிக்கப்படுகிறது. தொழில்நுட்பம் வளர வளர, நாம் வேலை செய்யும் முறையும் மாறுபடுகிறது.

உதாரணமாக, 20 ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் வாகனத்தில் பெட்ரோல் நிரப்ப, பணத்தை மட்டுமே செலுத்த முடியும். 15 ஆண்டுகளுக்கு முன்பு அட்டை மூலம் பணம் செலுத்தும் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. 5 ஆண்டுகளுக்கு முன்பு அட்டை செலுத்தும் இயந்திரங்கள் மிகவும் நவீனமாகவும் மெலிதாகவும் மாறியது. 2 ஆண்டுகளுக்கு முன்பு, BHIM UPI, Google pay, PayTM போன்ற பயன்பாடுகள் நாம் பணம் செலுத்தும் முறையை மாற்றியுள்ளன.

இப்போது பெட்ரோல் விற்பனை நிலைய காசாளரை நினைத்துப் பாருங்கள். கடந்த 15 ஆண்டுகளில், காசாளர் 4 விதமான பணப் பரிவர்த்தனைகளை கற்று, மாற்றியமைக்க வேண்டியிருந்தது! எனவே, தொழில்நுட்பம் தொடர்ந்து வளர்ச்சியடையும் என்பதையும், இதனால் வேலைகள் மாற்றங்களுக்கு உள்ளாகின்றன என்பதையும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் . இன்று நாம் கற்றுக்கொள்வது தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும், ஏனென்றால் வேலையின் எதிர்காலம், வேலை சந்தையில் முன்னேற்றங்கள், தொழில்நுட்ப முன்னேற்றத்தைச் சார்ந்தது.



XI_TM_EMPS_CHAP01_2022.indd 12 30-06-2022 12:11:11







தொழிலாளர்களின் எதிர்காலம் என்று வரும்போது, எப்படிப்பட்ட புதிய தொழில்கள் உருவாகும் மற்றும் அதிக தேவை இருக்கும் வேலைத் திறன்கள் குறித்து யாருக்கும் உறுதியாகத் தெரியாது. எதிர்காலம் இன்றைய பணிச்சூழலில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும் என்பது நமக்குத் தெரியும், மேலும் மாற்றத்தின் வேகம் யாரும் எதிர்பார்ப்பதை விட வேகமாக இருக்கும். எளிமையாகச் சொன்னால், வேலையின் எதிர்காலம் என்பது வரும் ஆண்டுகளில் உருவாகும் வேலை, தொழிலாளர்கள் மற்றும் பணியிடங்கள் எப்படி இருக்கும் என்பதற்கான கணிப்பாகும்.




புதிய தொழில்நுட்பங்கள், மக்கள்தொகை மாற்றங்கள் மற்றும் தொழிலாளர் சந்தையில் கோவிட்–19 இன் தாக்கம் ஆகியவை, நிறுவனங்கள் வணிகத்தை நடத்தும் விதம் மற்றும் அவர்களின் திறமைகள், இந்த புதிய யுகத்தில் செழிக்க வளர்வதற்குத் தேவையான திறன்களை தீவிரமாக மாற்றி வருகின்றன. ஏறக்குறைய 50% நிறுவனங்களில் 2020க்குள், தங்கள் முழுநேர பணியாளர்களில் குறிப்பிடத்தக்க அளவில் ஆட்குறைப்புக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதே நேரத்தில் அனைத்து ஊழியர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களுக்கு குறிப்பிடத்தக்க திறன் மேம்பாடு தேவைப்படும்.

## உலக மன்றத்தில் வேலை முயற்சிகளின் எதிர்காலம்

வேலையின் எதிர்கால முனைவு என்பது, 2013 ஆம் ஆண்டு, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) டைரக்டர் ஜெனரலால், ஏழு நூற்றாண்டு முயற்சிகளில் ஒன்றாக முன்மொழியப்பட்டது. 2015 இல் முன்முயற்சி தொடங்கப்பட்டதன் மூலம், ILO நான்கு ஆண்டு பயணத்தைத் தொடங்கியது, இது ஒரு தொடர்ச்சியான தேசிய உரையாடல்களுடன் தொடங்கியது, அதைத் தொடர்ந்து 2019 இல் 108வது சர்வதேச தொழிலாளர் மாநாடு, ஒரு சுயாதீனமான உலகளாவிய ஆணையத்தின் அறிக்கை மற்றும் வேலையின் எதிர்காலம் குறித்த நூற்றாண்டு பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது.






XI_TM_EMPS_CHAP01_2022.indd 13 30-06-2022 12:11:11

## வேலையின் எதிர்காலம் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?

உலகப் பொருளாதார மன்றத்தின் 2016 வேலை வாய்ப்புகளின் எதிர்கால அறிக்கையின்படி, விமர்சன சிந்தனை, சிக்கலைத் தீர்ப்பது மற்றும் முடிவெடுப்பது போன்ற அடிப்படைத் திறன்கள் முக்கியத் தொகுதிகளாகும்.ஊழியர்கள் தங்கள் சூழலில் ஏற்படும் மாற்றங்களை விரைவாகக் கண்டறிய உதவுவதற்கும், அவர்கள் விரும்பும் விளைவுகளை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட பதில் உத்திகளை மாற்றியமைப்பதற்கும் ஒரு கட்டமைப்பை இவை நிறுவுகின்றன.

புதுமையான யோசனைகளைக் கண்டறிவது அவசியம் மட்டுமல்ல, அவற்றை விரைவாகச் செயல்படுத்துவது வணிக உலகில் உங்களுக்கு ஒரு அனுகூலத்தைத் தரும்.

## பணியாளர் திட்டமிடல்

முதலாளிகள் தற்போது பணியின் எதிர்காலத்திற்குத் துணைபுரியும் வலையமைப்புக்குகளை உருவாக்கத் திட்டமிட்டு வருகின்றனர், மேலும் நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு அதிகாரிகள், பணியாளர்களின் திறன்களை அடையாளம் காணும் முறைகளைத் தயாரித்து வருகின்றனர். இந்த செயல்பாடு பின்வருவனவற்றை உள்ளடக்கியது :

- எதிர்காலம் சார்ந்த கட்டமைப்பை ஆதரிக்கும் புதிய மற்றும் வளரும் நிலைகளைப் பற்றி தொடர்ந்து அறிந்திருத்தல்.
- துறை வாரியாக தொழில்நுட்ப தேவைகளை தீர்மானித்தல்.
- தற்போது வேலை எவ்வாறு செய்யப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேலைகள் பகுப்பாய்வு நடத்துதல்.
- எதிர்காலத் தேவைகளில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிய ஊழியர்களின் தற்போதைய போக்கின் திறன் பகுப்பாய்வு நடத்துதல்.
- பணியாளர் விழுமங்களை வலுப்படுத்துதல் – ஊழியர்கள் அவர்களின் பங்களிப்பிற்கு ஈடாக என்ன பெறுகிறார்கள் – மிக முக்கியமான பாத்திரங்களில் திறமையைத் தக்க வைத்துக் கொள்ள உதவுகிறது.
- வணிகத்தின் நோக்கம் வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்வது மட்டுமே என்பதை மாற்றுதல்

## எதிர்கால வேலைகளுக்குத் தயாராக இருப்பதற்கான உதவிக் குறிப்புகள்

- மாற்றங்களைக் கண்காணிக்கவும்.
- புதுப்பித்த நிலையில் இருங்கள்.
- தொழில்நுட்பம், தொழில்துறை போக்குகள் காலத்திற்கு ஏற்ப மாறுகின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- புதிய விஷயங்களைக் கற்றுக் கொண்டே இருங்கள்.
- எதிர்காலத்தைப் புரிந்துகொண்டு பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் நிபுணர்களிடம் உரையாடுங்கள்
- நேரத்துடன் நெகிழ்வாக இருங்கள்

## செயல் 1

கீழ்கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை கவனமாகப் பாருங்கள். கடந்த காலத்திலும் எதிர்காலத்திலும் பணி நடைமுறைகளில் பல்வேறு மாற்றங்களை இது காட்டுகிறது. ஒரு நண்பருடன் இணைந்து ஒவ்வொரு விஷயத்தையும் விரிவாக விவாதிக்கவும். நீங்கள் நன்றாக வேலை செய்வதற்கும் எதிர்காலத்தில் உங்கள் தொழிலை நிலைநிறுத்துவதற்கும் தேவையான சில திறன்களை எழுதுங்கள்.

| கடந்த காலம் | வேலையின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் | எதிர்கால வேலைக்கு தேவையான திறன்கள் |
|---|---|---|
| வேலை நேரம்: காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை | வேலை நேரம்: எந்த நேரத்திலும் | |
| பணியிடம்: அலுவலகம் அல்லது தொழிற்சாலை | பணியிடம்: எந்த நேரத்திலும், எங்கும் உதாரணமாக, ஊபர் ஓட்டுநர்கள் | |
| தொழில் வளர்ச்சி: நிறுவனத்தின் விதிகளின்படி<br>உதாரணமாக, ஒரு நபர் தனது தகுதி மற்றும் பல வருட அனுபவத்தின் அடிப்படையில் மட்டுமே பதவி உயர்வு பெற முடியும். | தொழில் வளர்ச்சி:<br>செயல்திறன் மற்றும் திறன்களின்படி, எடுத்துக்காட்டாக, ஒருவர் வயது குறைந்தவராக இருந்தாலும் அல்லது அடிப்படைப் பட்டம் பெற்றிருந்தாலும், திறமைகளை விரைவாகக் கற்றுக்கொண்டு, சிறப்பாகச் செயல்பட்டு இலக்குகளை அடைந்தால், பதவி உயர்வு பெற முடியும். | |
| வேலை பெறுதல்: அறிவு மற்றும் பட்டங்களின் அடிப்படையில் | வேலை பெறுதல்: அறிவு மற்றும் பட்டங்களின் அடிப்படையில் | |
| கற்றல்: நிறுவனத்தின் ஸ்பான்சர் செய்யப்பட்ட படிப்புகள், பட்டறைகள், வேலைப் பயிற்சிகள் மூலம் மட்டுமே எடுத்துக்காட்டாக, நிறுவனம் பயிற்சி அளித்தால் மட்டுமே ஒருவர் கற்றுக்கொள்ள முடியும். | கற்றலை யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும், எங்கும் செய்யலாம். உதாரணமாக, ஒரு நபர் பல திறன்களைப் பெறலாம், ஆன்லைனில் கற்றுக்கொள்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கையில் முன்னேற சான்றிதழ்களைப் பெறலாம். | |

## செயல் 2

உங்கள் பயிற்றுனர்கள் மற்றும் இணையத்தின் உதவியுடன், கடந்த 10 ஆண்டுகளில் உங்கள் வர்த்தகத்தில் ஏற்பட்ட ஐந்து மாற்றங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவும். அதற்கான காரணங்களையும் குறிப்பிடவும்.

| எனது வர்த்தகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் (கடந்த காலத்தில்) | | |
|---|---|---|
| வ.எண் | மாற்றங்கள் | மாற்றத்திற்கான காரணங்கள் |
| | | |
| | | |
| | | |
| | | |

## முடிவுரை

இப்போது உங்களுக்கு, வேலையின் எதிர்காலம் பற்றிய கருத்து எப்படி உருவானது, அதை வளர்ப்பதில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) பங்கு மற்றும் உங்கள் வேலையில் புதுப்பித்த நிலையில் இருக்க நீங்கள் என்ன திறன்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைப் பற்றி தெளிவு ஏற்பட்டிருக்கும் . நீங்கள் உங்கள் வர்த்தகத்தை பகுப்பாய்வு செய்து, சமீபத்திய ஆண்டுகளில் என்ன மாற்றம் ஏற்பட்டது, ஏன் மாற்றம் ஏற்பட்டது மற்றும் எதிர்கால வேலைக்கு தேவையான திறன்களை மேம்படுத்தலாம்.

## மாணவர்களுக்கான கேள்விகள்

1. எதிர்காலத்தில் தொழில்துறை மாற்றங்களைப் புரிந்து கொள்ள எந்த கருவிகளைப் பயன்படுத்தலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? எடுத்துக்காட்டாக, செய்தித்தாள்களில் இருந்து வரும் தகவல்கள் அத்தகைய ஒரு கருவியாக இருக்கலாம்.

______________________________

______________________________

______________________________



XI_TM_EMPS_CHAP01_2022.indd 15 30-06-2022 12:11:11

2. உங்கள் வர்த்தகத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்களுக்கு ஏற்ப நீங்கள் மாற்றிக்கொள்ளும் சில வழிகளைப் பற்றி விவாதிக்கவும்.

3. உங்களுக்கு ஆர்வமுள்ள ஒரு துறையைக் கண்டறிந்து, அது தொடர்பான சில நிறுவனங்கள்/தொழில்களை பட்டியலிடவும்.

______________________________

______________________________

______________________________

## 6. சுய கற்பவராக மாறுதல்

### நோக்கங்கள்

இந்த பாடத்தின் முடிவில், உங்களால் முடியும்:

- சுய கற்றலை புரிந்து கொள்ள
- சுய கற்றலுக்கும் வகுப்பறை கற்பித்தலுக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டறிய

### அறிமுகம்

நீங்கள் வகுப்பறையில் எவ்வளவு காலமாக கற்றுக்கொண்டிருக்கின்றீர்கள்? மழலையர் பள்ளியிலிருந்து, உங்கள் ஆசிரியரிடமிருந்து, உங்கள் நண்பர்களிடமிருந்து, உங்கள் பெற்றோரிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பல்வேறு விஷயங்களைப் பற்றி சிந்திக்க முயற்சி செய்யுங்கள். வாழ்க்கையில் சில விஷயங்களைக் கேட்பதன் மூலம் புரிந்து கொள்ள முடியாது, அவற்றை நீங்களே கற்றுக் கொள்ள வேண்டும். சரியான வழிகாட்டுதல் மற்றும் ஊக்கத்துடன் சிலர் தாங்களாகவே கற்றுக்கொள்ள முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?. இந்த பாடத்தில் நீங்கள் சுய கற்றல் கலையை ஆராய்வீர்கள்.

### சுயமாக கற்றல்

சுய–கற்றல் என்பது கற்றலுக்கான அணுகுமுறையாகும், அதில் ஒரு நபர் தனது சொந்த கற்றல் தேவைகளை அடையாளம் காணவும், கற்றல் இலக்குகளை அமைக்கவும், தேவையான ஆதாரங்களைக் கண்டறியவும் மற்றும் அவருடைய சொந்த அறிவை மதிப்பீடு செய்யவும் முயற்சி செய்கிறார்.

பாரம்பரிய வகுப்பறை கற்றல் முறைகளுக்கு மாறாக, சுய–கற்றலின் விளைவு எந்த சோதனை முடிவுகளாலும் அளவிடப்படுவதில்லை, மாறாக அது ஒரு குறிப்பிட்ட பகுதியில் உங்கள் திறன்கள் அல்லது அறிவை மேம்படுத்துவதற்கு பங்களிக்கும், மேலும் சிக்கல்களைத் தீர்க்க, பணிகளைச் செய்ய, நடைமுறையில் அவற்றைப் பயன்படுத்துகிறது. இது முழுமையான கற்றலைப் பற்றியது.

சுயாதீனமாக கற்றல் சவாலானதாக இருக்கலாம், சில காலத்திற்கு முன்பு சுய–கற்றல் ஒரு பெரிய சாதனையாக கருதப்பட்டாலும், அது முன்பு இருந்ததைப் போல் இப்போது கடினமாக இல்லை. பெரிய அளவிலான இலவச ஆதாரங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான உள்ளடக்க ஆதாரங்கள் மற்றும் நிகழ்நிலைப் படிப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றுடன், புதியதைக் கற்றுக்கொள்வதில் கணிசமான அளவு நேரத்தையும் சக்தியையும் செலவிட வேண்டும்.




### சுய கற்றல் திறன்கள் என்றால் என்ன?

சுய–இயக்க கற்றல் திறன்கள் கற்றல் பணிகளை மற்றவர்களால் இயக்காமல் நிர்வகிக்கும் திறனை உள்ளடக்கியது. அவை பயனுள்ள வாழ்நாள் முழுவதும் கற்றலுக்குத் தேவையான திறன்கள் மற்றும் கல்லூரியில் மாணவர்கள் வளர்த்துக்கொள்ள எதிர்பார்க்கப்படும் பல கற்றல் திறன்களில் ஒன்றாகும்.

## சுயமாக கற்பவரின் தகுதிகள்

ஒரு சுய–கற்பவராக இருக்க, ஒருவருக்கு இந்த 5 எளிய குணங்கள் தேவை:




### சுயக் கற்றலுக்கும் வகுப்பறைக் கற்றலுக்கும் உள்ள வேறுபாடு:

| | சுயக் கற்றல் | வகுப்பறை கற்றல் |
|---|---|---|
| நெகிழ்வுத்தன்மை | உங்கள் இருப்பு மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் நேரத்தை திட்டமிடலாம். | குறிப்பிட்ட நேரத்தை பின்பற்ற வேண்டும் |
| சுற்றுச்சூழல் | சுய தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ள முடியும் | தனக்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்கு ஏற்றவாறு ஒத்துப்போக வேண்டும் |
| பணிகள் மற்றும் இலக்குகளை ஒதுக்குதல் | யதார்த்தமான மற்றும் சுய வரையறுக்கப்பட்ட இலக்குகளை அமைத்து முடிக்க முடியும் | ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு ஏற்றவாறு ஒத்துப்போக வேண்டும் மற்றும் தேவைகளின் அடிப்படையில் மாற்ற முடியாது |
| உள்ளடக்கங்கள் | உங்கள் திறன் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டது | அனைவருக்கும் நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டத்தை கடைபிடிக்க வேண்டும் |
| சமூக தொடர்புகள் | உடனுக்குடன் விவாதிப்பதற்கு இணை இல்லாததால் இது குறைக்கப்படுகிறது | நல்ல புரிதலுக்காக சக நண்பர்களின் உதவியைப் பெறலாம் |

### சுயக் கற்றலைக் கருத்தில் கொள்வதற்கான காரணங்கள்:

- சுய கற்றல் உங்கள் சிக்கலைத் தீர்க்கும் திறன்களை வளர்க்க உதவுகிறது.
- சுய கற்றல் மன அழுத்தம், தேர்வுகள், காலக்கெடு இல்லாதது. முழு திருப்தியும் ஆர்வமும் தேவை.
- உங்கள் வாழ்க்கையை முன்னேற்ற உதவும் இரண்டாம் நிலை திறன்களை நீங்கள் பெறுவீர்கள்.
- சுய–கற்றல் என்பது புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்வதற்கான உங்கள் தனிப்பட்ட விருப்பத்திலிருந்து வருகிறது. இதனால், நீங்கள் சாதனை உணர்வைப் பெறுவீர்கள் மற்றும் நோக்கத்தை உணர்கிறீர்கள்.
- நீங்கள் கற்றுக் கொள்ளும் முறையை நீங்கள் தேர்வு செய்ய வேண்டும். உங்களுக்கு வசதியான ஊடகம், வீடியோக்கள், உரைகள், பரிசோதனைகள் அல்லது



XI_TM_EMPS_CHAP01_2022.indd 17 30-06-2022 12:11:11



வெபினார்களை நீங்கள் காணலாம், மேலும் பலதரப்பட்ட ஊடகங்களைக் கற்க திறமையாகப் பயன்படுத்தப்படலாம்.

எனவே, நீங்கள் எவ்வாறு சுயக்கற்றலை ஆரம்பிக்கலாம்?

1. **கற்றல் இலக்குகளை அமைக்கவும்**

   யதார்த்தமான இலக்குகளை அமைப்பது, பல்வேறு கற்றல் பாணிகளைப் பயன்படுத்தும் போது உங்கள் உற்பத்தித்திறனை மையப்படுத்தவும் மேம்படுத்தவும் உதவும். இது அடையக்கூடிய ஒன்றை நோக்கிச் செயல்பட உங்களை அனுமதிக்கிறது மற்றும் உங்கள் கற்றலுக்கு நோக்கத்தை அளிக்கிறது.

2. **உங்கள் கற்றல் வளங்களை மதிப்பிடுங்கள்**

   நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான படி இது. சுய–கற்றவர்களாக, உங்களைப் பயிற்றுவிக்க நீங்கள் பயன்படுத்தும் பொருட்களின் நம்பகத்தன்மை மற்றும் சரியான தன்மையை சரிபார்க்க வேண்டியது அவசியம். உங்கள் கற்றல் முன்னேற்றம் அடைய உங்களுக்கு அணுகக்கூடியவற்றையும் நீங்கள் பார்க்க வேண்டும்.

3. **கற்றல் செயல்பாட்டில் ஈடுபடுங்கள்**

   உங்கள் கற்றல் செயல்முறையை நீங்கள் எவ்வளவு தள்ளிப் போடுகிறீர்களோ, அவ்வளவு கடினமாக நீங்கள் கற்கத் தொடங்குவீர்கள்.

4. **நீங்கள் கற்றுக்கொண்டதைப் பயன்படுத்துங்கள்**

   அறிவைத் தக்கவைத்துக் கொள்வதற்கான சிறந்த வழி அதைப் பயன்படுத்துவதாகும். நீங்கள் எதையாவது சுயமாக கற்றுக் கொள்ளும்போது, நீங்கள் பெற்ற அறிவைப் பயன்படுத்துவதற்கு நிஜ உலக பயன்பாட்டைக் கண்டறிய முயற்சிக்கவும். உதாரணமாக, நீங்கள் ஒரு புதிய மொழியைக் கற்க முயற்சிக்கிறீர்கள் என்றால், அதை சொந்த அல்லது சக கற்பவருடன் பேச முயற்சிக்கவும். இதன் மூலம் உங்கள் கற்றலில் அதிக நம்பிக்கையைப் பெறுவீர்கள், மேலும் நீங்கள் படித்ததை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள முடியும்.

5. **மற்ற கற்பவர்களுடன் ஒத்துழைக்கவும்**

   நிகழ்நிலை சமூகங்களைப் பற்றிய ஒரு பெரிய விஷயம் என்னவென்றால், உலகம் முழுவதிலுமிருந்து ஒரே மாதிரியான ஆர்வங்கள் மற்றும் கற்றல் அபிலாஷைகளுடன் மக்களைச் சந்திக்க இது உங்களை அனுமதிக்கிறது.

6. **உங்கள் அறிவைப் பகிர்ந்து கொள்ளுங்கள்**

   சமூகத்திற்குத் திரும்பக் கொடுப்பதே இறுதிப் படியாக இருக்கும். நீங்கள் எவ்வளவு அதிகமாகக் கற்பிக்கிறீர்களோ, அவ்வளவு எளிதாகக் கற்றுக்கொள்வது உங்களுக்கு எளிதாக இருக்கும்.
